1991 சனவரி 25]

குன்றத்தூர் பேரூராட்சியில் அரசு பொது மருத்துவமனை.

*3446—திரு. இ. கோதண்டம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்றத்தூர் பேரூராட்சியில் அரசு பொதுமருத்துவ மனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சுயதொழில் தொடங்க குறுகியகால சிறப்புப் பயிற்சி.

*10848—திரு. சி. ரா. முனிரத்தினம்:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா;—

படித்து வேலை வாய்ப்பு இன்றி இருப்போர் விரும்பி சுயதொழில் துவங்க வேலை வாய்ப்பு அலுவலகங்களை அணுகினால் குறுகிய கால சிறப்புப் பயிற்சி தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயலாது.

திரு. சி. ரா. முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்களுக்கு வேலையில்லாத காரணத்தால் சுயநிதிக் கடன்கள் வழங்கக்கூடிய அரசின் திட்டத்தின்கீழ் அதை முறையாக அவர்கள் பயன்படுத்த முடியாத காரணத்தால், வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக அவர்களுக்குக் குறுகிய காலப்பயிற்சி அளித்தால் நல்லதாக இருக்கும் என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற வேலைகளில் இளைஞர்களுக்கு ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் 25 தொழில்